**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**I.A.No.3/2021 in O.S.No. 36/2020**

சித்திராதேவி ......... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) வீராசாமி

2) வீரம்மாள்

3) மேகலா

4) கிருஷ்ணன்

5) நீலாவதி

......... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 28.10.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு..S..பாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## ஆணையுரை

மனுவில் கண்டபடி அசல் வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ளக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் இம்மனு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

1. மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் மனுதாரரும் அவரது கணவரும் வெளியூருக்கு வேலைக்கு

சென்ற சமயம் திடீரென 10.10.2021 அன்று எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் சொத்தில் அத்துமீறி தாவா சொத்து முழுவதையும் ஆக்கிரமித்து அதில் ஆஸ்பெஸ்டாசிஸ் வீடு அமைத்து சுற்றிலும் சுவர் வைத்து கட்டுமான பணி செய்து கொண்டிருந்ததை தடுக்க சென்றதில் மனுதாரரையும் அவரது கணவரையும் மிரட்டி அச்சுறுத்தி உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்துவதாக மிரட்டினார்கள் என்றும், மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்தில் பிரவேசிக்கவோ அதில் கட்டுமான வேலை செய்யவோ எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையுமில்லை என்றும், எதிர்மனுதாரர்களின் அத்துமீறிய கட்டுமானங்களை இடித்து அகற்றிட நிலுவையில் உள்ள அசல் வழக்கிலேயே உரிய திருத்தம் செய்யவும் ஏற்கனவே உள்ள அ-பரிகாரத்தை நீக்கி தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என விளம்புகை செய்தும் தொடர் பரிகாரமாக பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ தடை இடையூறு செய்யாதிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி எழுப்பியுள்ள கட்டுமானங்களை அகற்றிட கெடு நிர்ணயித்தும், தவறும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம் அப்புறப்படுத்த உத்தரவிட வேண்டுமென பரிகாரத்தை திருத்தம் செய்ய தக்க உத்தரவாக வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

**1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்**

2. மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கக்கூடியதல்ல. மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது முற்றிலும் பொய். மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்யும் முன்பாகவே எதிர்மனுதாரர்கள் தங்களுக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் கட்டுமானங்களை செய்து முடித்துள்ளனர். மனுதாரர் எதிர்மனுதாரர்களின் சொத்தை எவ்வகையிலாவது அடைந்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். பொய்யான காரணங்கள் அடிப்படையில் இம்மனுவின் பேரில் அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என மனு செய்திருப்பது சரியானதல்ல. மனுதாரர் வெளியூர் சென்று வேலை பார்ப்பதாக சொல்வது பொய். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்வைக்கப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா அசல் வழக்கு நிலுவையில் இருந்த போது தாவா சொத்தில் எதிர்மனுதாரர்களின் அத்துமீறிய கட்டிய கட்டுமானங்களை இடித்து அகற்றிட அசல் வழக்கில் உரிய திருத்தம் மேற்கொள்ள அனுமதியளிக்க வேண்டுமென மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்யும் முன்பாகவே எதிர்மனுதாரர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கட்டுமானங்களை கட்டி முடித்துள்ளனர் என்றும், எதிர்மனுதாரர்கள் சுவாதீனத்தில் இருக்கும் சொத்தை எவ்வகையிலாவது அடைந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், திருத்தம் செய்யக்கோருவது ஏற்புடையதல்ல என்றும் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது.

6. பொதுவாக ஒரு வழக்கில் சாட்சி விசாரணை தொடங்குவதற்கு முன்பு எந்த நிலையிலும் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம் என்றும், அசல் வழக்கில் சாட்சி விசாரணை தொடங்கப்பட்ட பின்பு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாமல் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்கமுடியாது என உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ல் கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி வீடு கட்டும் பொருட்களை இறக்கி வைத்து அஸ்திவாரம் தோண்ட முயன்றதாகவும் வாதியால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளது காண முடிகிறது. மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட சொத்தில் எதிர்மனுதாரர்கள் அத்துமீறி கட்டுமானம் கட்டியுள்ளதாகவும், மேற்படி கட்டுமானத்தை இடித்து அகற்றிட அசல் வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் முன்வைத்த வாதத்தை கவனத்தில் கொண்டும், மேற்படி திருத்தம் செய்வதால்

வழக்கினை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதாலும், எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும் இத்திருத்தல் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் இம்மனுவை அனுமதிப்பது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே நீதியின் நலன் கருதி மனுதாரரின் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/- P. பாலமுருகன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி -இல்லை
மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் -இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி -இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் -இல்லை

Sd/- P. பாலமுருகன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.